[2013 ஏப்ரல் 9

188—

துணிநூல் ஆராய்ச்சி மையம்

***22096—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் ஜவுளிப் பூங்காவில் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தோடு இணைந்து துணிநூல் ஆராய்ச்சி மையம் மற்றும் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பல்லடம் ஜவுளிப் பூங்காவில் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தோடு தமிழக அரசு இணைந்து துணிநூல் ஆராய்ச்சி மற்றும் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணிநூல் ஆராய்ச்சிக்காக கோவையில் தென்னிந்திய துணிநூல் ஆராய்ச்சி மையம் உள்ளது. இங்கு நூல் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்யப்படுகிறது. பொறியியல் கல்லூரிகளில் B.E. (Textile Management) *பட்டங்கள் பெறுவதற்கு இங்கே திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, ஜவுளிப் பூங்காவில் துணிநூல் ஆராய்ச்சி மற்றும் கல்லூரிகள் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என்கின்ற மகத்தான சிந்தனையில் மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மக்கள் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின்*

2013 ஏப்ரல் 9]

பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன். தமிழகத்திலேயே அதிகமாக பல்லடம் தொகுதியில் பகுதிநேர ரேஷன் கடைகளாக இருந்த 18 கடைகளை, முழுநேர ரேஷன் கடைகளாகவும், புதிதாக 22 பகுதிநேர ரேஷன் கடைகளாகவும், பல்லடம் தொகுதியில் மட்டும் 40 கடைகளைப் புதிதாக உருவாக்கித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், பல்லடம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்கி, தங்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இரண்டாவது முறை முதலமைச்சராக இருந்தபோது பல்லடத்தில் ஜவுளிப் பூங்கா தொடங்கப்பட்டு, இன்றைக்குச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலேயே துணியை அதிகமாக உற்பத்தி செய்கின்ற தொகுதி பல்லடம் தொகுதிதான். தமிழகத்திலேயே பல்லடம் தொகுதியில்தான் விசைத்தறிகள் அதிகமாக உள்ளன. அதற்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்று முறை முதலமைச்சராக இருந்தபோது, விசைத்தறிக்கு மூன்று முறையும் மின் கட்டணச் சலுகை அளித்து, தனி tariff அமைத்துக் கொடுத்து, விசைத்தறித் தொழில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அதனை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குச் கொண்டு சென்று, விசைத்தறிக்கென்று ஒரு தனி வாரியம் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான்; மக்களுக்காக நான்’ என்ற தாரக மந்திரத்தினை மனதில் நிறுத்தி, மக்களுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகின்ற முதலமைச்சரை நாம் பெற்றிருக்கின்றோம். பல்லடம் ஜவுளிப் பூங்காவில், ஜவுளிப் பூங்காவும், I.LF.S.-ம் சேர்ந்து, படித்த இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து, வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. தமிழகத்தில் ஜவுளித்

துறையின் சார்பில் வேலைவாய்ப்பிற்காக 16 மாவட்டங்களில், 20 இடங்களில் Training and Designs Centre ஏற்படுத்தப்பட்டு, பயிற்சி கொடுத்து, அந்தப் பயிற்சி பெறுகின்ற காலங்களில், தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஒரு நபருக்கு பயிற்சி பெறுகின்ற காலத்தில் 2,000 ரூபாய் உதவித் தொகை கொடுத்து, இங்கே வேலைவாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-45

இதுதவிர, 2013-2014 ஆம் ஆண்டு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்காக வேலைவாய்ப்புத் துறையின் மூலமாக 100 கோடி ரூபாய் அளவில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மகளிர் திட்டங்கள்-Entrepreneurship Development Programme (EDP) மூலம் மகளிருக்காகத் தனியாக பயிற்சிகள் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மேலும், குறுகியகாலப் பயிற்சியாக நெசவாளர்களுக்கு 45 நாட்கள் பயிற்சி கொடுத்து, அதற்காக பல்வேறு திட்டங்களை-weaving, sizing, warping, printing, embroidering, tailoring போன்ற பயிற்சிகள் கொடுத்து, பயிற்சி பெறும் நபர்களுக்கு அரசு உதவித் தொகையும் வழங்குகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல்லடம் தொகுதியில் துணி அதிகமாக நெய்யப்படுகிறது; மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மின் கட்டண சலுகைகள் எல்லாம் கொடுத்ததைச் சுட்டிக்காட்டி, விசைத்தறிக்கென தனி வாரியம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய ஒவ்வொரு துறைவாரியாக தனியாக ஆய்வு செய்து, எல்லாத் துறைகளுக்கும் தலைசிறந்த முதல்வராக இங்கே சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விசைத்தறிக்கென தனியாக வாரியம் அமைக்கின்ற செயற்குறிப்பு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், மாண்புமிகு அம்மா அவர்களிடம் இதுகுறித்து எடுத்துக்கூறி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

189—

போக்குவரத்துப் பணிமனை

*4404—**திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் மாநகரப் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனை அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள். மேற்படி பணிமனை அமைக்க, நானும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகச் சென்று, இடத்தினை ஆய்வு செய்து, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் நிலம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு, நிலம் கிடைக்கப்பெற்றவுடன், பணிமனை அமைக்கின்ற பணியினை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.